தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-7-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழக பேராசிரியருக்கு**
**தேசிய வேளாண் அறிவியல் கண்டுபிடிப்பு விருது**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உணவு பதன்செய் பொறியியல் துறை பேராசிரியர் முனைவர் பெ. ராஜ்குமார் அவர்களுக்கு புதுதில்லி வேளாண் ஆராய்ச்சி நிலையம் தேசிய வேளாண் அறிவியல் கண்டுபிடிப்பு விருதினை வழங்கி சிறப்பித்துள்ளது.

இவ்விருது முனைவர் பெ. ராஜ்குமார் அவர்கள், உணவு பதன்செய் துறையில் புளி விதை நீக்கும் இயந்திரம் போன்ற பல்வேறு இயந்திரங்களில் அவர் மேற்கொண்ட ஆராய்ச்சி மற்றும் பங்களிப்புக்காக வழங்கப்பட்டது.

இவ்விருது பெற்றமைக்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் நீ.குமார் அவர்கள் முனைவர் பெ.ராஜ்குமார் அவர்களை பாராட்டி நினைவு பரிசு வழங்கினார். மேலும், பல்கலைக்கழக இயக்குனர்கள் மற்றும் முதன்மையர்களும் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்